08-07-2025.
O.S.No. 209/2018

வா. சா. 1 சுந்தரராஜ் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

3 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

வாதி சுபஸ்ரீயின் பவர் ஏஜன்ட் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வாதி சுபஸ்ரீ கடந்த 20 ஆண்டுகளாக எனக்குத் தெரியும். வாதியின் கணவர் ரியல் எஸ்டேட் செய்து வருகிறார். நான் போடும் பிளாட்டுகளுக்கு அப்ரூவல் வாங்கிக் கொடுப்பேன். அதன் மூலமாகத் தெரியும். திண்டுக்கல் அரசன் ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் நான் வேலை பார்த்து வருகிறேன். மேலும் அந்த நிறுவனத்திற்கு அப்ரூவலும் வாங்கிக்கொடுப்பேன். வாதியின் கணவர் அரசன் ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் பங்குதாரராக இருந்து வருகிறார் என்றால் அதுபற்றி தெரியாது. திண்டுக்கல் அரசன் ரியல் எஸ்டேட் நிறுவனம் பெரிய அளவில் செயல்பட்டு வருகிறது என்றால் சரிதான். திண்டுக்கல் அரசன் ரியல் எஸ்டேட் நிறுவனம் பொதுமக்கள் மற்றும் வங்கிகளிடம் நல்ல பெயருடன் இருக்கும் நிறுவனம் என்றால் எனக்குத் தெரியாது. அப்ரூவல் வாங்கிக்கொடுக்கும் தொழில் நான் செய்து வருவதால் பொதுவாக ஒரு சொத்தை வாங்கும்போது வில்லங்கம் போட்டு வாங்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும் என்றால் சரிதான். வாதி எனக்கு 2015 ம் வருடத்தில் பவர் கொடுத்துள்ளார். வாதி தாவாச்சொத்தை வங்கியில் ஏலம் எடுத்ததன் மூலமாக 2006 ம் வருடம் கிரையம் பெற்றார். வாதி வைஸ்மேன் Homes Private Limited இல் இருந்து ஏலம் எடுத்தார். வைஸ்மேன் வங்கியில் தாவாச்சொத்து எப்போது ராமசாமியால் அடமானம் வைக்கப்பட்டது என்பதை நிரூபண வாக்குமூலத்தில்

குறிப்பிட்டுச்சொல்லவில்லை என்றால் சரிதான். சொத்தை அடமானம் வைக்கும் நபர் சொத்தைப்பொறுத்து அடமானப்பத்திரம் எழுதிப்பதிந்து கொடுப்பார் என்றால் சரிதான். வாதி 2006ம் வருடம் சொத்தை ஏலம் எடுக்கும்போது நான் உடனிருந்தேன். சொத்தை ஏலம் எடுப்பதற்கு முன்பு சொத்து சம்மந்தமாக வில்லங்கம் பார்த்தோமா என்றால் பார்த்தோம். ராமசாமி நான் குறிப்பிடும் வங்கிக்கு சொத்தைப்பொறுத்து அடமானப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் எழுதிக் கொடுக்கவில்லை. ஆனால் அவர் பெயரில் உள்ள அசல் உரிம ஆவணத்தை வங்கியில் கொடுத்துள்ளார். தாவாச்சொத்தைப்பொறுத்து சர்பாசி 2002ன்படி விடப்பட்ட ஏலத்தில் யார் யார் கலந்துகொண்டார்கள், எந்த தேதியில் ஏலம் எடுக்கப்பட்டது போன்ற விவரத்தை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுச்சொல்லவில்லை என்றால் சரிதான். ராமசாமி மேற்படி வங்கிக்கு உறுதிமொழி ஆவணம் எதுவும் எழுதிக்கொடுத்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஏலம் நடந்தபோது நான் சுபஸ்ரீயோடு சென்று கலந்துகொண்டேன். மேற்படி வங்கியில் வைத்து ஏலம்விடப்பட்டது. விவசாய நிலங்களைப்பொறுத்து வங்கியிலிருந்து ஜப்தி நடவடிக்கை எடுக்க இயலாது என்றால் எனக்குத் தெரியாது. தாவாச்சொத்தில் இரண்டுமாடி வீடுள்ளது. அந்த வீடு கீழ்தளம் 850 சதுரடி மேல்தளம் 850 சதுரடியில் உள்ளது. தாவாச்சொத்தின் மொத்த விஸ்தீரணம் 85 செண்ட் ஆகும். 85 செண்டில் 850 சதுரடி போக பாக்கி நிலங்கள் விவசாய நிலங்களாக உள்ளது என்றால் தரிசாக உள்ளது. ஷெட் போட்டுள்ளார்கள். போட்டிருந்த ஷெட்டுகளை ராமசாமியின் உறவினர்கள் கழட்டிச்சென்றுவிட்டார்கள். வாதசாஆ.8 வாதி பெயருக்கு வங்கி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் என்றால்

சரிதான். மேற்படி ஆவணம் 3.4.2006 ம் தேதியன்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரையப்பத்திரம் எழுதும்போது சொத்தின் சுவாதீனம் வங்கி வசம் இல்லை என்றால் சரிதான். வாதசாஆ.9 1.11.2014 ம் தேதி 10 ம் பிரதிவாதியிடம் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்படி தாவாச்சொத்தை ஒப்படைப்பு செய்தததற்கான சான்று என்றால் சரிதான். வாதி மனுதாரராக இருந்து சர்பாசி ஆக்டின்கீழ் சுவாதீனம் ஒப்படைக்கக்கோரியதன்பேரில் வாசாஆ.9 ஒப்படைப்பு ஏற்பட்டது என்றால் சரிதான். வாதசாஆ.9 ல் சர்பாசி ஆக்டின்படி என்னென்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்ற விவரம் அதில் இல்லை என்றால் சரிதான். வாதசாஆ 10 முதல் 12 ஆக பட்டா, மின்கட்டண ரசீது, வீட்டுவரி ரசீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் 2018 ம் வருடத்திற்குரியது என்றால் சரிதான். சர்பாசி ஆக்டின்கீழ் வங்கி முறையான நடவடிக்கை மேற்கொள்ளாமல், நாங்கள் எங்களது செல்வாக்கை பயன்படுத்தி வங்கியிடமிருந்து சொத்தை ஏலம் எடுத்ததாக கிரையம் வாதி பெயருக்கு எழுதி பதிந்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி வங்கி அலுவலரை விசாரித்தால்தான் அதுபற்றி தெரியவரும் என்றால் சரிதான். வாதி தலைமைக் குற்றவியல் நீதிமன்றத்தில் சிஆர்பி.எண்.1211/2011 ன் கீழ் சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்ககோரி மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த மனு மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டுக் கொள்ளுமாறு அறிவுறுத்தி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து 1 முதல் 4 பிரதிவாதிகள் DRT நீதிமன்றத்தில் முறையீடு செய்தார்கள் என்றால் சரிதான். அந்த முறையீடு உரிய நேரத்தில் தாக்கல் செய்யப்படவில்லை

என்ற காரணத்தினால் மட்டுமே தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த உத்தரவு பேப்பர் அளவில் பிறப்பித்த உத்தரவுதான் என்றாலும், சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்கவில்லை என்றாலும் சரியல்ல. 01.07.2018 ம் தேதி பிரதிவாதிகள் தாவாச்சொத்தி அத்துமீறி நுழைந்ததாக சொல்லிவரும் சம்பவத்திற்கு காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுவதால் காவல் நிலையத்திற்கு போகவில்லை. நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த தேதி ஞாபகமில்லை. வில்லங்கம் போட்டு பார்த்ததில் லேட்.ராமசாமி 11 ம் பிரதிவாதியாகிய கூட்டுறவு வங்கியிடம் சொத்தை அடமானம் வைத்த விவரம் தெரியவந்ததாக என்றால் தெரியவந்தது. சொத்தில் வில்லங்கம் இருப்பதை தெரிந்தே வங்கியிலிருந்து சொத்தை ஏலம் எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வில்லங்கத்தை தெரிந்து எப்படி ஏலம் எடுத்தோம் என்றால் சொத்தின் அசல் ஆவணம் மேற்படி வங்கியில் இருந்ததால் ஏலம் எடுத்தோம். மேற்படி வங்கி ஏற்படுத்திய ஏலமும், வங்கியிலிருந்து வாதி பெற்ற கிரையமும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சொத்தில் எந்தவித உரிமையும் இல்லாத வாதி 1 முதல் 9 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என பரிகாரம் கோர அருகதையற்றவர் என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதியும் லேட்.ராமசாமியும் 23.12.2003 ம் தேதி எழுதிக்கொண்ட வாதசாஆ.5 பாக பத்திரம் அவர்களுக்குள் re-union ஆகாமல் எழுதிக்கொண்டதாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. அதனால் தாவாச்சொத்தைப்பொறுத்து விளம்புகை பரிகாரம் கோர எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. சொத்தின் சுவாதீனம்

எந்தக்காலத்திலும் வாதி வசம் வரவில்லை என்றாலும், இவ்வழக்கிற்காக சொத்தின் சுவாதீனம் வாதி வசம் இருப்பதாக பொய்யாக கட்சி செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. பிராது தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை –இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.07.08 16:52:50 +0530

Principal District Judge,
Dindigul.